உ

சிவமயம்

நான்கு மகாவாக்கியார்த்தம்.

இஃது

விருத்தாசலம் வேதாந்த மடம்

ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் அனுமதிப்படி

போத்திரமங்கலம் அன்பர்

வேலாயுதம் அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

உ

ஸ்ரீ கணேசாயநம :

திருச்சிற்றம்பலம்.

ரிபுகீதை.

இருபத்தெட்டாவது

நான்கு மகா வாக்கியார்த்தமுரைக்கும்

அத்தியாயம்



௨

பரசிவ வணக்கம்.

ஆனைமுக னறுமுக னருளாந்தேவி
  யனந்தகண மளவற்ற முனிவர்தேவ
ரேனையுள நல்லன்ப ரியாவராலு
  மெப்பயனும் பெறவேண்டி யிதயத்தின்க
ணானமற வுபாசிக்கப் பட்டன்னோர்க்கிங்
  குவந்தபய னருள்கருணை மூர்த்தியாகி
வானமென வகண்டசிதா காயமான
  வத்துவதாம் பரசிவனை வணங்கல்செய்வாம்(1)

4

நடேசர்

சுத்தசிதா காயமதா மெந்தவத்து
 சுதந்தரமாந் தனதுபர சத்தியோடே
பத்தரெலா முய்யும்வணங் கருணையாலே
 பரதத்வ வடிவாகத் திரண்டெழுந்தே
யத்துவிதா நந்தமுண ரநுபவத்தி
 னதிசயமிங் கெல்லோரு மறியும்வண்ணம்
நித்தமுமே யானந்த நடனஞ்செய்யு
 நிதமந்த வத்துவினை நினைவில்வைப்பாம். (2)

5

இதுவுமது.

எவ்வடிவி னிடப்பாக மிலங்காநின்ற
 விவ்வுலக மனைத்துக்கு மாதாவாகு
மெவ்வடிவின் வலப்பாக மிலங்காநின்ற
 விவ்வுலக மனைத்துக்கும் பிதாவுமாகு
மெவ்வடிவின் பதத்திலுள சிலம்பிலோசை
 யெவ்விதமா நூலுக்கு மேதுவாகு
மெவ்வடிவின் விழிமூன்று விலங்குமியாவு
 மிணையற்ற வவ்வடிவே யெம்மைக்காக்க (3)

6

சிவன்முதலியோர் வணக்கம்

அகிலசகன் னாயகனா யநந்தசத்தி
யமைவுற்ற வகண்டசிவன் சரணம்போற்றி
நிகிலசகன் மாதாவாய் நித்யாநந்த
நிசவடிவா மம்பிகையின் சரணம்போற்றி
சகலவித விக்கினமுந் தீர்த்தெல்லோர்க்குஞ்
சாதகமாம் விநாயகனற் சரணம்போற்றி
தகைமைமிகு மன்பர்க்குச் சிவஞானத்தைத்
தந்தருளுஞ் சண்முகனற் சரணம்போற்றி. (4)

7

நூல்.

சருவவித வுலகத்துஞ் சார்வதற்குச்
சாலவுமே யரிதாகிக் குய்யமாகிச்
சுருதிமுடி யனைத்திலுநற் சாரமாகிச்
சுத்தமதாம் பரப்பிரம சொரூபந்தன்னை
யிருளறவே நேராக வறிவிக்கின்ற
வியல்புள்ள நான்குமகா வாக்கியத்தின்
பொருளினையிங் கெல்லோர்க்கு மிதமேயாகப்
பூன்றசிவன் புகன்றபடி புகலுவாமே. (1)

பெருமைமிகு மிருக்குமறை முடியிலுள்ள
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்கியமொன்று
மிருண்மருவா யெசுர்வேத முடியிலுள்ள
விலகுமகம் பிரமாஸ்மி வாக்கியமொன்று
மருண்மருவா சாமமறை முடியிலுள்ள
மகத்தான தத்வமசி வாக்கியமொன்று
மரியவதர் வணவேத முடியிலுள்ள
வயமான்மா பிரமமெனும் வாக்கியமொன்றும்.
(2)

இந்தவித நான்குமறை முடியின் கண்ணே
யிருக்கின்ற நான்குமகா வாக்கியத்துண்
முந்தியதாம் பிரஞ்ஞானம் பிரமமென்றே
மொழிந்தமகா வாக்கினுடைப் பொருளைச்சொல்
மைந்தவிதிற் பிரஞ்ஞானம் பிரமமென்று [வா
மருவுபத மிரண்டாகு மற்றிவற்றின்
முந்தியதாம் பிரஞ்ஞான பதத்தினுக்கு
முக்கியமா மர்த்தத்தை மொழியக்கேளாய்.(3)

10

ஞானமதே பிரஞ்ஞான மென்னலாகும்
ஞானத்தாற் சகலமுமே தெரிவதாகும்
ஞானமதிற் றெரிகின்ற சகத்தனைத்தும்
ஞானத்திற் கற்பிதமாய்த் தெரிவதாலே
ஞானமல தன்னியமா யொன்றுமில்லை
ஞாலமுத லெப்பொருளு ஞானமாத்ரம்
ஞானமதே நமதுநிச வடிவமாகும்
ஞானமதே பரப்பிரம வடிவமாமே. (4)

11

சருவசக ததிட்டான சொரூபமான
சத்தியஞா னநந்த வத்துதானே
பிரமமெனும் பதத்தினுடை யர்த்தமாகும்
பிரமமதிற் கற்பிதமாய்த் தோன்றுகின்ற
ஒருபொருளும் பிரமத்திற் கயலேயாகா
துணர்வுற்ற பொருளெல்லாம் பிரமமாத்ரம்
பிரமமதே நமதுநிச சொரூபமாகும்
பிரமமதே பிரஞ்ஞான சொரூபமாமே. (5)

பிரஞ்ஞானப் பொருடானே பிரமமாகும்
பிரமமெனும் பொருடானே பிரஞ்ஞானங்கா
ணஞ்ஞான முதலியதா முபாதியாலே
யகண்டபரம் பொருடானே யிரண்டுபோலாம்
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்கியார்த்தம்
பிறங்கியதா லுபாதியெலா நீங்கும்போது
விஞ்ஞான கனமான வத்துவொன்றே
வேறற்ற வகண்டார்த்த மாகிநிற்கும். (6)

பிரிவுற்ற வுபாதியுறுஞ் சீவன்றானே
பிரஞ்ஞான பதத்தினுடை வாச்சியார்த்தம்
விரிவுற்ற வுபாதியுறு மீசன்றானே
விளம்பியிடும் பிரமபத வாச்சியார்த்த
மொருமித்த நிருபாதி வத்துத்தானே
யுபயவித பதத்திற்கு மிலட்சியார்த்தந்
தெரிவித்த வுபயபத லட்சியைக்யந்
திகழுமகா வாக்கினுடை யகண்டார்த்தங்காண்.

அறைந்தபடி மகாவாக்கி னகண்டார்த்தத்தை
யறிந்துமன தம்மயமா யிதரமெல்லா
மறந்துதன தாவரண மனைத்துநீங்கி
மயக்கமற நிர்ப்பதுவே யகண்டாகாரஞ்
செறிந்தமனோ விருத்தியெனச் செப்பலாகுஞ்
செப்புமகண் டாகார விருத்திதானே
யறிந்தவரா லதிசுகமாஞ் சீவன்முத்தி
யாகுமென வங்கங்கே யறையலாமால். (8)

சத்தியசிற் சுககனமாய்ச் சாந்தமாகிச்
சலனமிலாச் சாசுவத சுபாவமாகி
நித்தியநிர்க் குணமாகி நிருவிகற்ப
நிரவயவ நிரஞ்சனமாய் நிறைந்துநின்ற
வத்துவித பரப்பிரம மானேனென்
றறிவுற்றம் மயமான விருத்திதானே
சுத்தவகண் டாகார விருத்தியென்று
சூட்சமுணர் ஞானிகளாற் சொல்லலாகும். (9)

சந்ததநான் பரப்பிரம சொரூபமன்றிச்
சற்றேனுஞ் சம்சாரி யானேனன்றென்
றிந்தவித மறிவுற்றுச் சலத்திற் சேர்ந்தங்
கேகரச மாகின்ற லவண மேபோ
லந்தமிலா வகண்டபரப் பிரமத்தின்க
ணைக்கியமே யடைந்த மனே விருத்திதானே
மைந்தவகண் டாகார விருத்தியென்று
மாசற்ற ஞானிகளான் மதிக்கலாகும். (10)

சொன்னவகண் டாகார விருத்திதானே
சுகமேலா யிருக்கின்ற சீவன்முத்தி
பின்னையகண் டாகார விருத்திநீங்கிப்
பிராரத்தம் யாவையுமே நீங்குங்காலை
யன்னியமா முபாதிகளோ ரணுவுமின்றி
யகண்டேக ரசமான வத்துவாக
மன்னியிருக் கின்றநிலை விதேகமுத்தி
மற்றுமகண் டேகரச நிலைமைகேளாய். (11)

18

ஓதியிடும் பிரஞ்ஞான பதமுந்தள்ளி
வுரைசெய்த பிரமமெனும் பதமுந்தள்ளிப்
பேதமிலாப் பரப்பிரம நானேயென்று
பிரியமுடன் பழகியபா வனையுந்தள்ளி
யேதையுமே நினையாமல் வெறிதிருந்திங்
கிவ்விதமா யிருப்பதெனு நினைவுந்தள்ளி
யீதெனவே யுணரவொண் விருப்புத்தானே
யென்றுமகண் டேகரச நிலைமையாமே. (12)

19

மனதுடைய விகற்பங்க ளணைத்துமின்றி
மாயைமுத லுபாதிகளோ ரணுவுமின்றி
யனியமிலா வகண்டேக ரசசொரூப
மாகியிருக் கின்றநிலை விதேகமுத்தி
சொனநிலைதான் சுபாவமதாய்க் கிட்டுமட்டுஞ்
சுழல்கின்ற விவகார மனைத்துந்தள்ளி
யனகவகண் டாகார விருத்திதன்னை
யலப்பறவே யநவரத மப்யாசிப்பாய். (13)

புகலுமகண் டாகார விருத்திதன்னைப்
புரையறவே பழகியிடு மியல்பைக்கேளா
யகிலமுமே யகண்டபரப் பிரமமென்று
மதுதானே நானென்று நானதென்று
மிகழ்வறவே யெப்போது மிடைவிடாம
லேகபர பாவனையே யிதயத்தின்கண்
விகலமறச் செய்வதுவே யகண்டாகார
விருத்திதனைப் பழகியிடு மியல்பாமைந்தா. (14)

தேகமுத னனென்ன றுவிதவிர்த்தி
திகழ்சாட்சி நானெல்லல் சாட்சிவிர்த்தி
யேகபர நானென்ன லகண்டவிர்த்தி
யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத்தள்ளி
யாகுமகண் டாகார விருத்திதன்னை
யநவரத மாதரவா யப்யாசித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்கடீர்த்துச்
சொன்னவகண் டேகரச சொரூபமாவாய். (15)

22

இன்னவிதம் பிரஞ்ஞானம் பிரமமென்னு
மிலகுமகா வாக்கினுடை யருத்தஞ்சொன்னே
முன்னியதா யிங்குரைசெய் நீதியெல்லா
மூன்றுமகா வாக்கிலுமே தெரிந்துகொள்வாய்
பின்னையகம் பிரமாஸ்மி யென்பதாகப்
பேசுமகா வாக்கினுடைப் பொருளைக்கேளா
யன்னவகம் பிரமாஸ்மி வாக்கியத்தி
லகம்பிரம மஸ்மியெனப் பதமூன்ருமே. (16)

23

முந்துமகம் பதத்துக்குச் சீவனர்த்தம்
மொழிபிரம பதத்துக்கவ் வீசனர்த்த
மந்தமிலாச் சீவபர வயிக்கியந்தானே
யஸ்மியெனும் பதத்தினுடை யருத்தமாகு
மிந்தவித மிந்தமகா வாக்கியத்தி
னேகரச மாகியுள வகண்டார்த்தத்தைப்
புந்தியினு லாய்ந்திதனை யனுபவித்துப்
புகன்றவகண் டேகரச சொரூபமாவாய். (17)

பேதமுறு முபாதியினற் கிஞ்சிஞ்ஞத்வம்
பிறங்கியசர் வஞ்ஞத்வ மாதியாவு
மோதியசீ வேசருடைத் தன்மம்போலா
முபாதியெலாம் விசாரித்துத் தள்ளுங்காலை
யாதியிலாச் சிவபர வைக்யமிஞ்சு
மதுதானே யகண்டார்த்த மாமவற்றை
யோதுமகம் பிரமாஸ்மி வாக்கியத்தா
லுணர்ந்தந்த வகண்டார்த்த வடிவேயாவாய்.

அனகவகம் பிரமாஸ்மி வாக்கியார்த்த
மாசிரிய னருளியவா றறிந்தபோதும்
பினையுமதை யுத்தியுடன் மனனஞ்செய்து
பிராந்திதரின் சங்கையெலாம் பெயர்க்கவேண்
சொனவிதமாய்ச் சங்கையெலாம் பெயர்ந்த [டும்
சுழல்கின்ற விபரீத மனைத்துந்தீர [பின்னர்ச்
வினிசமகம் பிரமாஸ்மி யென்பதாக
வாதரவோ டப்யாசஞ் செய்யவேண்டும். (19)

சத்தியசிற் சுககனமாம் பிரமநானே
சாலவுப சாந்தபரப் பிரமநானே
நித்தியநிர்க் குணமான பிரமநானே
நிரவயவ நிரஞ்சனமாம் பிரமநானே
யத்துவித மானபரப் பிரமநானே
யகண்டமதாம் பரப்பிரம நானேயென்று
சத்துருவாம் விபரீதந் திருமட்டுஞ்
சந்ததமுஞ் சலியாமற் பழகவேண்டும். (20)

அகிலபரி பூரணமாம் பிரமநானே
யான்மாவுக் கபின்னபரப் பிரமநானே
சகலமுமாய்த் தெரிகின்ற பிரமநானே
சட்பாவ விகாரமிலாப் பிரமநானே
துகளணுவு மருவாத பிரமநானே
துவிதமிலாச் சுத்தபரப் பிரமநானென்
றகமருவு விபரீதந் தீருமட்டு
மநவரத மாதரவாய்ப் பழகவேண்டும். (21)

28

இந்தவிதம் விசாரித்த விவேகியெல்லா
மேகபர பாவனேயே யிடைவிடாமற்
சந்ததமுஞ் செய்ததனல் விபரீதத்தைச்
சற்றேனு மிஞ்சாது நாசஞ்செய்தே
யந்தவகம் பிரமாஸ்மி வாக்கியார்த்த
மானவகண் டார்த்தத்தி னனுபவத்தைப்
புந்திதனிற் பிரதிபந்த மொன்றுமின்றிப்
பூரணமா யெப்போதும் பொருந்தவேண்டும்

29

பலவிதமாம் வாதனேயுந் தூரத்தள்ளிப்
பகர்ந்தபடி யகண்டார்த்த மநுபவிப்பா
யிலகுமகம் பிரமாஸ்மி வாக்கியார்த்த
மிவ்விதமா யிசைப்புற்றே மினியுனக்குத்
திலகமதாந் தத்வமசி வாக்கியார்த்தந்
திடமாகச் சித்தமிசைத் தெரியச்சொல்வாந்
தலேமையதாய்த் தயங்கியவிவ் வாக்கியத்திற்
றத்வமசி யெனமூன்று பதங்களாமே. (23)

மாயையெனு முபாதியுறு மீசன்றானே
  மருவியதற் பதமுரைசெய் வாச்சியார்த்த
மாயதன தவித்தையுறுஞ் சீவன்றானே
  யறைகின்ற துவம்பதமோர் வாச்சியார்த்த
மேயமதா முபாதியெலா மிழந்தபின்ன
  ரேகவிழிக் கணமான வத்துத்தானே
தூயபத மிரண்டுக்கு மிலட்சியார்த்தந்
  தொடர்புற்ற வைக்கியமே யசிபதார்த்தம்(24)

சொல்லியவிவ் வைக்கியமா மகண்டார்த்தத்தைச்
  சுத்தமதாந் தத்வமசி வாக்கியத்தாற்
கல்லெனவே திடமாக வறிந்தெப்போதுங்
  கலங்காம லகண்டேகரச மேயாவா
யெல்லையிலா வகண்டவடி வாகுமட்டு
  மிதரமுணர் விருத்தியெலாந் தூரத்தள்ளிப்
புல்லுமகண் டாகார விருத்திதனைப்
  புரையறவே பழகியதாற் பூன்றனுவாய். (25)

தற்பதலட் சியமான பிரமரூபந்
துவம்பதலட் சியமான நீயேயாவா
யற்பமுமே யிதிலேய மமைவதில்லை
யகண்டசிவன் றன்னுணை யறைந்ததுண்மை
சொற்பமிலா வகண்டபரி பூன்றமான
சுத்தமதாம் பரப்பிரம நீயேயென்று
செப்பியிடுங் குருபரனே குருவாகின்றேன்
செப்பியவா றறிந்தவனே சீடனுனேன். (26)

சத்தியசிற் சுககனமாம் பிரமநீயே
சகலபரி பூரணமாம் பிரமநீயே
நித்தியநிட் களமான பிரமநீயே
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரமநீயே
யத்துவித மானபரப் பிரமநீயென்
றையமற உபதேசஞ் செய்கின்றேனே
யுத்தமனுங் குருவாவன் மற்றேரெல்லா
மொருகாலு முயர்வுற்ற குரவராகார். (27)

அலேவற்ற வறிவான பிரமநீயே
  யகண்டேக ரசமான பிரமநீயே
நிலேபெற்ற நிச்சலமாம் பிரமநீயே
  நிராவரண மானபரப் பிரமநீயே
சலமற்ற சாந்தபரப் பிரமநீயே
  சதானந்த கனமான பிரமநீயென்
றுலேவற்ற வுபதேசஞ் செய்கின்றேனே
  யுத்தமனுங் குருவாவன் மற்றோராகார். (28)

உச்சமதாங் குருவருளு மகண்டார்த்தத்தை
  யுவகையுட னுள்ளபடி கேட்டபின்னர்
நிச்சலமாம் புத்தியினு னிச்சயித்து
  நிருமலமா யகம்பிரம மானேனென்றே
துச்சமிலா வநுபூதி யடைந்தவன்றான்
  றுகளற்ற சற்சீடன் மற்றோரெல்லா
மெச்செயலேச் செய்யினுமே சீடராகா
  ரேகபர மறிந்தவனே சீடனுவன். (29)

36

சர்வமகா மந்திரமு முபதேசிப்போர்
சாமான்ய குரவரெனச் சாற்றலாகு
மிருமையிலா பரப்பிரம நீயேயென்றிங்
கிணையற்ற வுபதேசஞ் செய்கின்றோனே
பெருமைமிகுஞ் சற்குருவென் றுரைக்கலாகும்
பின்வெகுவாய்ப் பேசுவதாற் பெறும்பேறென்ன
வரியபர நீயென்போ னுசானுனோ
னகம்பிரம மெனவறிவோன் மாணுனேன் (28)

37

ஆதலினுற் பரப்பிரமநீயே யென்றிங்
கருள்பவனே யாசிரிய னெனவேவோர்ந்து
சாதகமாஞ் சற்குருவி னுபதேசத்தைச்
சத்தியமா நம்பியதைச் சாதிப்போனே
பேதமிலா வகண்டபரப் பிரமஞானம்
பெற்றதனுற் பவபந்த மனைத்துந்தீர்ந்து
போதகன மானபர வடிவேயாவன்
புகன்றதிலோ ரணுவேனு மையமில்லை. (31)

38

அகிலமறை முடிவுக்கு மகண்டமான
வத்துவித பரப்பிரம சொரூபந்தானே
தகைமைமிகுந் தாற்பரியப் பொருளாமென்றுந்
தற்பிரம நீயென்று முபதேசித்த
மகிமைமிகுஞ் சற்குருவின் வாக்கியத்தான்
மகத்தான பரம்பொருளைக் கேட்டுள்ளத்தில்
விகலமற வறிவதுவே சிரவணங்காண்
வேறென்றுஞ் சிரவணமே யன்றுமைந்தா.(32)

39

அருள்வடிவா மாசிரிய னருளிச்செய்த
வகிலமகா வாக்கினுடை யகண்டார்த்தத்தை
மருளறவே கேட்டுணர்தல் சிரவணங்காண்
மற்றதெலாஞ் சிரவணமே யாகாதென்றுஞ்
சிரவணமே செயலுற்ற பொருளை மீண்டுஞ்
சிரத்தையுடன் யுத்தியினுற் சிந்தைசெய்தல்
பிரமையெலாந் தீர்க்கின்ற மனனமாகும்
பேசியவிம் மனனத்தின் யுத்திசொல்வாம் (33)

திரிசியமாய்ச் சிதைகின்ற வுடனானல்ல
  தியங்கியிடும் பௌதிகமாம் பொறினானல்ல
பிரிவுபெறு நாநாவா முயிர்னானல்ல
  பிறந்து நசிக்கின்றமன முதனானல்ல
விருள் வடிவா மஞ்ஞான வுரு நானல்ல
  விவையாவு மொருமித்த திரணானல்ல
நிருமலமா யாவையுமே நிகழ்த்தாநின்ற
  நீக்கமிலாச் சின் மாத்ர சொரூபமேநான். (34)

தூலவுடல் சூக்கும தேகத்திலில்லை
  தூலவுடல் சூக்கவுடலிவ்விரண்டு
மாலயமாங் காரண தேகத்திலில்லை
  யவைமூன்றுந் துரியத்தி லிலவேயில்லை
கோலமுறுந் தேகமெலா மிலாததாலுங்
  கூறுபடாச் சின்மாத்ர சொரூபமொன்றே
காலமொரு மூன்றிலுமே யிருப்பதாலுங்
  களங்கமிலாச் சின்மாத்ர சொரூபமேநான்,(35)

42

கனவினிடை நனவில்லை யிவ்விரண்டுங்
காரண மாஞ் சுழுத்திதனி லில்லையந்த
நனவுகனுச் சுழுத்திகளுந் துரியத்தில்லை
நாலுவித வவத்தைகளுஞ் சுத்தத்தில்லை
சொனவிதமா யவத்தையெலா மிலாததாலுஞ்
சுத்தமதாஞ் சின்மாத்ர சொரூபமொன்றே
யநவரத மழியாம லிருப்பதாலு
மத்துவித சின்மாத்ர சொரூபமேநான். (36)

43

தேகமுதற் சடமான விவையனைத்துந்
திரிசியமாய்க் கடமெனவே நசிப்பதாலு
மேகபர சின்மாத்ர வடிவாமான்மா
வெப்போதுந் திருக்குருவா யிருப்பதாலும்
பாகமுறுந் தேகாதி மித்தையாகும்
பகுப்பற்ற வான்மாவே வுண்மையாகு
மாகையினுற் றேகாதித் திறனுனல்ல
வநுசூத வறிவான வான்மாவேநான். (37)

44

சத்திய ஞானனந்த சுபாவமான
சகலவதிட் டானபரப் பிரமத்தின்கட்
சித்திர வநிருதசட துக்கமான
செகத்தெல்லாங் கற்பி தமாய்த் தோற்றலாலே
யித்துவித செகத்தெல்லா மாயுங்காலே
யிலகுமதிட் டானபரப் பிரமமேயாஞ்
சுத்திகையிற் கற்பிதமாய்த் தோற்றும்வெள்ளி
சோதிக்கி லதிட்டான சுத்திதானே. (38)

45

இருமையெனத் தோற்றிய விச்சகத்தனைத்து
மிருக்கின்ற திலங்குகின்ற தின்பமென்ன
மருவியவிவ் வநுபூதி வாயுங்காலே
மன்னுமதிட் டானத்தின் சுபாவமேயாஞ்
சருவவதிட் டானபரப் பிரமத்துக்கே
சத்திய ஞானநந்தத் தன்மையன்றி
யொருபொழுது மில்லாத வெறும்பொய்யான
வுலகத்துக் கோதியவித் தன்மையுண்டோ.(39)

46

காலமொரு மூன்றிலுமே யிருக்கையாலுங்
கற்பிதமாம் யாவையுமே விளக்கலாலுஞ்
சாலவுமே யாவையினு மினிமையாலுஞ்
சத்திய ஞானனந்த சொரூபநானே
யாலயமா மென்னிடையிற் கனவேபோல
வகிலமுமே கற்பிதமாய்த் தோற்றலாலே
கோலமுற தோற்றியிடுந் தோற்றமெல்லாங்
குறைவற்ற வதிட்டான வடிவா நானே. (40)

47

என்னிடையிற் கற்பிதமாய்க் கனவின்கண்ணே
யிலங்கியதாம் யாவையுமே யாயுங்காலை
மன்னு மதிட்டானமதா நானேயன்றி
மற்றெவையு மெனக்கயலா யிலாததேபோற்
பின்னமிலா வென்னிடையி னனவின்கண்ணே
பிறங்கியதாம் யாவையுமே யாயுங்காலை
யன்னவதிட் டானமதா நானேயன்றி
யற்பமுமே யெனக்கயலா யிலவேயில்லை. (41)

ஓதியவா றுண்மையினை யோருங்காலை
  யுபாதியிலா வெனதுநிச சொரூபத்துக்கும்
பேதமிலாப் பரப்பிரம சொரூபத்துக்கும்
  பேசுமிலக் கணமொன்று யிருப்பதாலே
யாதியிலா வகண்டபர வடிவேநானென்
  றநவரத மாய்வதுவே மனனயுத்தி
மாதவனே யிவ்விதமா மயக்கந்திர
  மனனத்தின் சாதகமாம் யுத்திசொன்னேம்(42)

சந்தனமென் றேதியிடும் விருட்சமிதே
  சங்கையறக் காணென்னு மாத்தன்சொல்லைச்
சுந்தரமாக் கேட்கினுமே யதனைநன்றாச்
  சோதித்தே சங்கையெலாந் தீர்ப்பதேபோ
லந்தமிலா பரப்பிரமநீயே யென்றிங்
  காசிரிய னருளினுமே யதனைநன்றாய்
புந்தியுறும் யுத்தியினால் விசாரஞ்செய்தே
  பொருந்தியதன் சங்கையெலாம் போக்க
    வேண்டும் (43)

50

சிரவணமு மனனமுமே செய்தபின்னர்
செறிவுற்ற விபரீத மனைத்துந்திர
விரவுபக லெப்போது மிடைவிடாம
லினிமையொடு நிதித்தியாசஞ் செய்யவேண்டும்
பரவியிடும் விசாதிய விருத்தியின்றிப்
பரம்பரையாஞ் சசாதிய விருத்திதானே
யிருமையிலா நிதித்தியாச மாகுமித்தா
லெய்தியதன் விபரீதம் யாவுந்தீரும்.

51

செகம்பரனு னீதெனவே வேறுவேருய்ச்
செறிகின்ற விசாதிய விருத்தியின்றி
யகம்பிரமம் பிரமமக மகமெல்லாமென்
றநவரத மிடையறவே தொடராநின்ற
தகும்பிரம பாவனையாம் விருத்திதானே
தடையற்ற சசாதிய விருத்தியாகு
மிகும்பிரிய முற்றிதனை யப்யாசிக்கின்
மேவுவிப ரீதமெலா மடைவாய்த்தீரும்.

52

பொருந்திநிதஞ் செய்கின்ற சிரவணத்தாற்
புகலுமசம் பாவனைதான் முன்புநீங்கி
வருந்திநிதஞ் செய்கின்ற மனனந்தன்னல்
வாளாவாம் சம்சய பாவனையுநீங்கி
விரிந்துநிதஞ் செய்கின்ற நிதித்தியாசத்தால்
விபரீத பாவனையு நீங்கும்போது
நிரந்தரமாம் பரப்பிரம சாட்சாத்கார
நிச்சலமாந் தன்மனதி னிகழுமன்றே. (46)

53

சத்துருவாம் பிரதிபந்த மொன்றுமின்றிச்
சலனமிலாப் பரப்பிரம சுகத்தைமேவி
யித்துவித நினைவணுவு மிலாதுநீங்கி
யிருளான வாவரண மனைத்துநீங்கிச்
சித்துருவாம் பரப்பிரம சொரூபத்தின்கண்
க்ஷீரசல நியாயம்போற் சேர்ந்துநிற்கும்
புத்தியுடை விருத்தியினிற் பிரதிவிம்பிக்கும்
பூரணசை தன்னியமே சாட்சாத்காரம். (47)

54

பேசியவிப் புத்தியுடை விருத்திதானே
பிறங்குமகண் டாகார விருத்தியாகு
மாசறவிவ் விருத்தியினிற் பிரதிபிம்பிக்கு
மறிவுருவே யகண்டபர சாட்சாத்கார
நேசமொடிவ் வகண்டபர சாட்சாத்கார
நிட்டையினைப் பெற்றவரே முத்தராவ
ரீசனுடை யுபயதிருப் பதந்தன்னை
யியம்பியதி லெள்ளளவு மையமில்லை. (48)

55

இன்னவித மூன்றுமகா வாக்கியத்தி
னேகரசமாகு மகண்டார்த்தஞ் சொன்னோம்
பின்னையுனக் கயமான்மா பிரமமென்னும்
பேசுமகா வாக்கினுடைப் பொருளைச்சொல்வா
மன்னியமி லந்தமகா வாக்கியத்தி
லயமான்மா பிரமமெனப் பதமூன்றுகும்
பன்னுபத மூன்றுக்கு மடைவேயாகப்
பகர்கின்ற வருத்தத்தைப் பரிந்துகேளாய்.(49)

சித்திரமா முபாதியுறுஞ் சீவன்றனே
செப்புமயம் பதத்துக்கு வாச்சியார்த்தம்
வித்தரமா முபாதியுறு மீசன்றனே
விளம்பியிடு மான்மபத வாச்சியார்த்தஞ்
சுத்தமதாஞ் சிவபர சொரூபந்தானே
சொல்லியவிவ் வுபயபத லட்சியார்த்த
மத்திறமா முபயபத லட்சியத்தி
ஹைக்கியமே பிரமமெனும் பதத்தினர்த்தம்.(50)

அறைந்தவண மிந்தமகா வாக்கியத்தா
லக்கியமா மகண்டார்த்த மறிந்துகொண்டு
செறிந்தபர சீவருடை வுபாதியெல்லாஞ்
செவ்வியதாம் விசாரத்தா னேதிசெய்திங்
கறிந்தபடி வகண்டபர வடிவேனென்
றனவரத மாதரவா யப்யாசித்து
மறந்தநின துருவான வகண்டார்த்தத்தை
மறவாம லெப்போது மநுபவிப்பாய். (51)

மற்றுமொரு விதமாயிவ் வாக்கியத்தின்
மதிக்கின்ற பொருளினையு முரைப்பக்கேளாய்
சற்றுமிருண் மருவாத சுவப்பிரகாச
சைதன்ய வடிவான பிரத்யக்கான்மா
வுற்றவய மான்மாவென் றுரைக்கப்பட்ட
வுபயவித பதத்துக்கு மருத்தமாகு
முற்றுமிலா விவ்வுலகின் மூலவத்து
மொழிவுற்ற பிரமபதத் தருத்தமாமே. (52)

பாவனமாம் பதங்களுடை லட்சியத்தின்
பகுப்பற்ற வைக்கியமே வாக்கியார்த்தஞ்
சீவபர பேதத்துக் கேதுவாகச்
செறிகின்ற வபரோட்ச பரோட்சத்துவாதி
யாவையுமே வுபாதியினாற் செறிந்ததன்றே
யிதனையெலாம் விசாரித்து நேதிசெய்திங்
கோவலற மிஞ்சுவதா மகண்டார்த்தத்தை
யுரைத்தபடி யெப்போது மநுபவிப்பாய். (53)

60

இன்னவித மிருக்குமுதல் வேதாந்தத்தி
லிலங்கிய விந்நான்குமகா வாக்கியத்தின்
பின்னமிலா வைக்கியமா மகண்டார்த்தத்தைப்
பேதமெனும் பிராந்தியெலாந் தீரும்வண்ண
மன்னசிவ னருளியவா றடைவாய்ச்சொன்னே
மறைந்தபடி யழுத்தமுற வ்ப்யாசித்தே
நின்னுருவாய் நிலைபெற்ற வகண்டார்த்தத்தை
நிருமலமாய் நீயென்று மநுபவிப்பாய். (54)

61

சுயமதுவாந் தத்வமசி யென்னும்வாக்யம்
சொல்லுமுப தேசமகா வாக்யமாகு
மியலுமகம் பிரமாஸ்மி யென்னும் வாக்யம்
மிலகுமநு பூதிமகா வாக்யமாகு
மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரமவாக்யம்
மனனத்தி னப்பியாச வாக்யமாகு
மயமான்மா பிரமமென வறையும்வாக்கிய
மவைக்கெல்லாஞ் சம்மதமாம் வாக்கியமாமே.

62

ஆதலினூற் றத்வமசி வாக்கியத்தா
லருளியவா றகண்டார்த்த மறிந்துகொண்டு
பேதமறப் பிரஞ்ஞானம் பிரமமென்று
பேசுமகா வாக்கதனுன் மனனஞ் செய்து
வாதகமி லயன்மான்மா பிரமமென்னும்
வாக்கதனூற் சரியெனவே சம்மதித்திங்
கோதுமகம் பிரமாஸ்மி வாக்கியத்தா
லுரைத்தவகண் டார்த்தத்தை யநுபவிப்பாய்.

63

அனிசமகம் பிரமாஸ்மி வாக்கியத்தா
லகண்டபர பாவனையே யப்யாசித்து
நனிமருவும் பாவனையா நாமரூப
நாட்டமெலா நன்ருக நாசஞ்செய்து
துனிமருவுந் துவிதத்தின் ஞெடர்பேயன்றித்
துகளற்ற வகண்டார்த்த மனுபவித்தவ்
வனியமிலா வகண்டார்த்த வடிவேயாவா
யவ்வண்ண மாகுவதே யகண்டமோட்சம். (57)

தனதுநிச வடிவான வகண்டார்த்தத்தைத்
தவிரவொரு பொருளுமொரு காலுமில்லை
பிணையுளதாய்க் காண்பவெலாஞ் சுத்தப்பொய்யே
பேசியவப் பொய்வடிவு மாயுங்காலை
யனியமிலா வகண்டபரப் பிரமந்தானு
மறைந்ததிலோ ரணுவேனு மையமில்லை
சொனவகையே யகண்டார்த்த ஞானம்பெற்றுச்
சுத்தபர வடிவாகி முத்தனுவாய். (58)

சகலமறை முடிவினுமே சாரமாகிச்
சாலவுமே சாருவதற் கரியதான
மிகவுமகா ரகசியமா மிவ்வர்த்தத்தை
மெய்யுணர்வா நந்தவடி வானவீச
னிகழ்வறவே புகன்றவிதம் புகன்றேமியாமு
மிப்பொருளை யிசைத்தபடி கேட்டுணர்ந்தோர்
பகைமருவும் பவபந்த மனைத்துந் தீர்ந்து
பகுப்பற்ற பரப்பிரம வடிவேயாவார். (59)

66

அகிலசகந் நாயகனும் பரேசன் றன்னை
யநவரத மாதரவா யாராதித்து
மிகவுமருட் பெற்றவரே மனதின் சுத்தி
மேவினராய் விளம்புமகா வாக்கியத்தின்
றகுபொருளைத் தடையறவே யநுபவித்துத்
தன்மயமே யாவரென நிதாகனுக்கு
நிகழ்வுறவே ரிபுமுனிவன் கருணையாலே
நிகிலமகா வாக்குகளின் பொருளுஞ்சொன்னான்.

67

வத்துநிர்ணய சாதகமாமகா வாக்கியங்களி
னற்பரசீவரின்
சுத்தமாயுள வைக்கியமறிந்தவர் சூழுமிப்பவ
லேசமிலாமலே
நித்தியாநந்த வத்துவதாகவே நிற்பரென்றுர
மாவிங்கு பேசுதல்
சத்தியாநந்தத் தாண்டவமாடுநஞ்
சாம்பமூர்த்தியின் பூரணரூபமே.

நான்கு மகாவாக்கியார்த்தம்

முடிந்தது.

குருஸ்தோத்திரம்.

அனாதிபவ வாரிதியி லழிந்தவென்னை
யகண்டபர ஞானமெனு நாவாய்க்கொண்டு
சனாதனமாம் பரப்பிரம தீரத்தின்கட்
சகசமதா யேற்றியசற் குருவேபோற்றி
வினாசமுறுந் தேகாதி நானென்றெண்ணி
விதம்விதமாந் துன்பமிகுந் திருந்தவென்னை
யனாமயமாம் பரப்பிரம நீயென்றோதி
யகண்டசுக நல்கியசற் குருவேபோற்றி (1)

அகிலமுமே யகண்டபரப் பிரமமென்று
மதுதானே நீயென்று முபதேசித்துச்
சகமுதலீ துண்மையதாஞ் சடநானென்றுஞ்
சங்கையெலா நீக்கியசற் குருவேபோற்றி
விகலமுறுங் கருமத்தாற் கதியுண்டென்று
வெகுகால மயக்கமுடன் சுழன்றவென்
தகைமைமிகு வகண்டபர ஞானந்தந்து [னைத்
தற்பரமே யாக்கியசற் குருவேபோற்றி. (2)

70

அருள்வடிவா யெழுந்தருளி யென்னையாண்
வகண்டபர வுருவான குருவேபோற்றி [ட
சருவவித வுலகத்துஞ் சார்வதற்குச்
சாலவுமே யரியபர குருவேபோற்றி
நிருமலமாய் நிட்களமாய் நிகரில்லாதாய்
நீக்கமற நிறைந்தபர குருவேபோற்றி
பரசிவமாய்ப் பராற்பரமாய் பரமான்மாவா
பரப்பிரம மானபர குருவேபோற்றி. [ய்ப்

71

விமலமதாய் வேறற்ற வகண்டாகார
விருத்தியினில் விளங்கியசற் குருவேபோ
யமலமதா யகண்டபர வித்தையாகி [ற்றி
யவித்தையெலா நீக்கியசற் குருவேபோ
நிமலமதாம் வித்தைக்கு மப்பாலாகி [ற்றி
நிச்சலமாய் நின்றபர குருவேபோற்றி
சமமதுவாய்ச் சற்றுமொரு சங்கமின்றிச்
சன்மாத்ர மானபர குருவேபோற்றி. (4)

சத்தியசிற் சுககனமாங் குருவேபோற்றி
சலனமிலாச் சாந்தபர குருவேபோற்றி
நித்தியநிர்க் குணமான குருவேபோற்றி
நிரஞ்சனமாய் நின்றபர குருவேபோற்றி
சுத்தபர வெளியான குருவேபோற்றி
சூட்சுமமாய் நிறைந்தபர குருவேபோற்றி
யத்துவித பூரணமாங் குருவேபோற்றி
யகண்டமதாஞ் சற்குருவே போற்றி
[போற்றி.

குருஸ்தோத்திரம் முடிந்தது.

ஸ்ரீ முருகன் (பவர்) பிரஸ்
விருத்தாசலம்.